# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 20.11.2017 | 1) தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 105 நாள் 16.11.2017ல் கழிவு நீர் மூலப்பொருளை மெசர்ஸ் வேதாந்தா நிறுவனத்திற்கு நேரடி விற்பனை செய்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாகஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. மேலும் மாமன்ற தீர்மான எண்.106 நாள் 16.11.2017ல் மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு குத்தகை அடிப்படையில் மெசர்ஸ் வேதாந்தா நிறுவனத்திற்கு நிலம் வழங்குவதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப முடிவு செய்யப்பட்டது.<br>மேலும் மேற்படி பிரேரணையானது 16.10.2017 அன்று கோரப்பட்ட விருப்ப கேட்பு கடிதத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது. மேற்படி விருப்ப கேட்பில் தகுதிவாய்ந்த நிறுவனமாக மெசர்ஸ் வேதாந்தா நிறுவனம் மட்டுமே கலந்து கொண்டுள்ளது. ஒரு மில்லியன் லிட்டருக்கு விலை ரூ 1250/— என மேற்படி விருப்ப கேட்பில் மேற்படி நிறுவனம் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>கழிவு நீர் நேரடி கிரையத்தினால் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கடலுக்கு நேரடியாக அனுப்புவதிலிருந்து மாநகராட்சி விடுபட ஏதுவாகும். நீண்ட காலமாக நிலுவையாக இருந்து வரும் பாதாளச்சாக்கடைத்திட்டம் அமுலுக்கு கொண்ட வர ஏதுவாக அமையும், மேலும் 30 வருடங்களாக பாதாளச்சாக்கடைத்திட்டத்திற்கு கேட்பு எழுப்பப்படாத சூழலில் இருந்து விடுபட ஏதுவானதாக அமையும். மேற்படி காரணங்களால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணையானது. மாநகராட்சிக்கு பொருளாதார, சுற்றுபுற சூழல் மற்றும் சுகாதார ரீதியாக பயனுள்ளதாக இருந்தாலும் விற்பனை ஒப்பந்த விதிகள் அனைத்தும் விரிவாக தெரிவித்து முன்மொழிவு கோரிக்கை கோருவதனால் தற்போது விருப்ப கேட்பில் கோரப்பட்டுள்ள தொகையினை காட்டிலும் கூடுதலான தொகைக்கு வர வாய்ப்புள்ளதாக கருதுவதால் மாநகராட்சிக்கு இலாபகரமானதாக இருக்கும். மேற்படி காரணத்தினால் 16.10.2017ல் கோரப்பட்ட விருப்ப கேட்பு மற்றும் மாமன்ற தீர்மான எண்கள் 105, 106 ஆகியவற்றை ரத்து செய்து முன்மொழிவு கோரிக்கை முறையில் மறு | 127) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்: 20.11.2017